# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

- - - - -

பதிவெண் [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

## வகுப்பு 11

நேரம்: 2.30 மணி **PART-III-வரலாறு** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - அ

குறிப்பு: **i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

**ii)** கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) வரலாற்றின் பழமையான காலம் .............. ஆகும்.

அ) பழங்கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) செம்புக்காலம் ஈ) இரும்புக் காலம்

2) ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக .............. இருந்தது.

அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல் இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன்பிடித்தல்

3) ஆதிச்சநல்லூர் .............. மாவட்டத்தில் அமைந்துள்ளது.

அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்

4) கூற்று (கூ) : முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

**காரணம் (கா) :** பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

அ) கூற்றும் காரணமும் சரியானவை; காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரியானது, காரணம் தவறானது. ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை.

5) புத்தர் தனது முதல் போதனையை .............. இல் நிகழ்த்தினார்.

அ) சாஞ்சி ஆ) வாரணாசி இ) சாரநாத் ஈ) லும்பினி

6) .............. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.

அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

7) அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துக்களுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ..............

அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப் இ) சர்ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

8) **பொருத்துக:**

| அ | | ஆ |
|---|---|---|
| அ) மெகஸ்தனிஸ் | - | 1. சாகுந்தலம் |
| ஆ) விசாகதத்தர் | - | 2. அர்த்தசாஸ்திரம் |
| இ) கௌடில்யர் | - | 3. இண்டிகா |
| ஈ) காளிதாசர் | - | 4. முத்ராராட்சசம் |

Scanned by CamScanner

அ) 3 4 2 1 ஆ) 2 4 3 1 இ) 3 2 4 1 ஈ) 3 4 1 2

9) கரிகாலன் ............ மகனாவார்.

அ) செங்கண்ணன் ஆ) கடுங்கோ இ) இளஞ்சேட் சென்னி ஈ) அதியமான்

10) கீழ்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

அ) தலையாலங்காணம் - நெடுஞ்செழியன் ஆ) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்

இ) கஜபாகு - இலங்கை ஈ) திருவஞ்சிக்களம் - சோழர்

அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)

11) இந்தோ-கிரேக்கக்கலை மற்றும் சிற்பப்பாணி .............. என்று குறிப்பிடப்பட்டது.

அ) மதுரா கலை ஆ) காந்தாரக் கலை இ) பாக் கலை ஈ) பாலா கலை

12) ஐரோப்பாவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்

(i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்திய தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.

(ii) அரேபியக் கடலில் வீசும் பருவக் காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.

அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (i), (ii) இரண்டுமே சரி ஈ) (i), (ii) இரண்டுமே தவறு

13) கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரைக் குகைக் கோயில் இல்லை?

அ) உதயகிரி குகை (ஒடிசா) ஆ) அஜந்தா-எல்லோரா குகை (மகாராஷ்டிரா)

இ) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா) ஈ) பாக் (மத்தியப்பிரதேசம்)

14) ............. காலவரிசைப்படுத்தி எழுது.

1) சமுத்திரகுப்தர் 2) முதலாம் குமாரகுப்தர் 3) இரண்டாம் சந்திரகுப்தர் 4) ஸ்கந்த குப்தர்

அ) 2 3 4 1 ஆ) 1 3 2 4 இ) 3 2 1 4 ஈ) 4 1 3 2

15) .............. என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.

அ) குந்தலா ஆ) பானு இ) அவந்தி ஈ) சர்வாகதர்

16) கீழ்கண்டவற்றுள் தவறானது எது?

அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.

ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.

இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப் பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.

ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

17) காம்போஜம் என்பது நவீன ..............

அ) அஸ்லாம் ஆ) சுமத்ரா இ) ஆனம் ஈ) கம்போடியா

18) அயல்நாட்டு வணிகர்கள்.............. என்று அறியப்பட்டனர்.

அ) பட்டணசாமி ஆ) நானாதேசி இ) விதேசி ஈ) தேசி

19) உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோயிலைக் கட்டியவர்கள் ..............

Scanned by CamScanner

அ) ராஷ்டிரகூடர் ஆ) டோமர் இ) சண்டேளர் ஈ) பரமர்

20) .............. ஒரு கலத்துக்கு சமம் ஆகும்.

அ) 28 கிகி ஆ) 27 கி.கி இ) 32 கி.கி ஈ) 72 கி.கி

## பகுதி - ஆ

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**

**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) பெருங்குளம் சிறு குறிப்பு வரைக.

22) இந்தியாவின் இரும்புக்காலம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?

23) மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன?

24) எட்டுத்தொகை நூல்கள் எவை?

25) மதுரைக்காஞ்சியிலிருந்து நீ அறிவது என்ன?

26) 'யவன' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

27) அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக.

28) கங்கைகொண்ட சோழபுரம் பற்றி குறிப்பு வரைக.

29) ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறுகுறிப்பு வரைக.

30) கஜினி மாமுது ஆதரித்த அறிஞர்கள்.

## பகுதி - இ

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×3=21**

**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) அச்சூலியன் சோஹானியக் கருவித் தொழில்நுட்பம் குறித்து எழுதுக.

32) மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.

33) காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.

34) அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நாம் அறிவது என்ன?

35) கிழார்-வேளிர் இருவருக்குமுள்ள வேறுபாடுகள்.

36) சிறுகுறிப்பு வரைக: மார்க்கோபோலோ

37) விக்ரமசீலா பல்கலைக்கழகம் குறித்துச் சிறுகுறிப்பு தருக.

38) சிறுகுறிப்பு வரைக: எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்

39) சிறுகுறிப்பு வரைக: ஆழ்வார்களும் நாயன்மார்களும்

40) மாலிக்காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது? **(அல்லது)**

ஆ) வேதக்கால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

**(அல்லது)**

42) அ) புத்தரின் எண்வழிப்பாதையை விவரி.

Scanned by CamScanner

ஆ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக.

43) அ) மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பை விவரிக்கவும். (அல்லது)

ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

44) அ) ''குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்'' விவாதிக்கவும். (அல்லது)

ஆ) வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துக்கள் யாவை?

45) அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக. (அல்லது)

ஆ) கஜினி மாமுதுவையும் கோரி முகமதுவையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுக.

46) அ) **பின்வருவன குறித்து சிறு குறிப்பு வரைக:**

1. ஊரார் 2. சபையார் 3. நகரத்தார் 4. நாட்டார் (அல்லது)

ஆ) கோயில் ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக.

47) அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் குப்த பேரரசின் ஆட்சிப் பகுதியை வரைந்து பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.**

அ) இந்திரபிரஸ்தம் ஆ) அயோத்தி இ) வல்லபி ஈ) காஞ்சி உ) மதுரை (அல்லது)

ஆ) டெல்லி சுல்தானியத்தின் 5 முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்கவும்.

@@@@@@

Scanned by CamScanner